மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

அகநானூற்றில் உயிரளபெடையின் பயன்பாடு
The Use of the "Uyiralabedai" In the Aganaanuuru

Valarmathi Bella / வளர்மதி பாலா[1]
Manonmani Devi M.A.R Annamalai / மனோன்மணி தேவி அண்ணாமலை[2]

[1]Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.

Date of Submission: 16-07-2025
Date of Acceptance: 30-10-2025
Date of Publication: 20-12-2025
Corresponding Author's Email:
manonmanidevi@fbk.upsi.edu.my

ஆய்வுச் சுருக்கம்

சங்கக் கால இலக்கியங்களில் எட்டுத் தொகை பாடல்கள் பழந்தமிழரின் வாழ்வியல் முறைகளை எடுத்துரைக்கும் மிகச் சிறந்த நூல்களாகும். அவற்றுள், அக சிறப்புகளை விளக்கும் சிறந்த பாடல்களைக் கொண்டது அகநானூறு. 13 முதல் 31 அடி வரையிலான நானூறு பாடல்களைக் கொண்ட இந்நூலைத் தொகுத்தவர் உப்பூரிக்குடி கிழார் மகனார் உருத்திர சன்மர். பண்டைய தமிழர்களின் அகவொழுக்க நினைவுகளோடு மட்டுமே அமையாமல், அவர்களது பெருமையும், அறமும், ஒழுக்கமும், வளமையும், பண்பும் இன்னும் பல வாழ்வியல் நெறிச் செப்பங்களும் இப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இந்த ஆய்வின் நோக்கமானது அகநானூறு பாடல்களில் உயிரளபெடைகளைக் கண்டறிவதும் பகுத்தாய்தலும் ஆகும். இஃது ஓர் பண்புசார் ஆய்வாக அமைகிறது. அகநானூறு பாடல்களில் அதிகமான உயிரளபெடைகள் பயன்பாடு இருக்கின்றன. அவை, அசை நிறையாகவும், உணர்ச்சி வெளிப்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கு அகநானூறு 1 முதல் 40வரை உள்ள பாடல்களில் இடம்பெற்றுள்ள உயிரளபெடைகள் கண்டறியப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

கருச்சொல்: அகநானூறு, அளபெடை, உயிரளபெடை பயன்பாடு

Abstract

The Ettuthokai anthologies of Sangam literature are among the finest works that illustrate the lifestyle practices of ancient Tamils. Of these, Akananuru is particularly noteworthy for its poetic portrayal of inner (akam) themes. This anthology, comprising 400 poems ranging from 13 to 31 lines, was compiled by Upoorikudi Kizhār Makanār Rudhira Sanman. The collection not only reflects the emotional and personal expressions of the ancient Tamils but also encapsulates their pride, virtues, ethics, prosperity, culture, and various life values. The objective of this study is to identify and analyze the uyiralapedaigal (emotive metaphors or life-infused expressions) found in Akananuru poems. This is a culturally grounded analysis. The use of uyiralapedaigal is prevalent throughout the anthology and serves both rhythmic and expressive purposes. For this research, the uyiralapedaigal found in poems 1 to 40 of Akananuru have been identified and examined.

Keywords: Akananuru poems, Alabedai, The use of Uyiralapedaigal

முன்னுரை

அகத்தியம் தொட்டு நம் முனிவர்களும் முன்னோர்களும் நமக்காக விட்டுச்சென்ற மிகப் பெரிய பொக்கிஷம் என்னவென்றால் நிச்சயம் நம்முடைய இலக்கியங்களும் இலக்கணங்களும்தான். சங்கக் காலத்தில் வாழ்ந்த மன்னர்கள் தங்களது நாட்டைக் காப்பதிலும், போர் புரிவதிலும் மட்டும் கவனம் செலுத்தவில்லை. மாறாக, சங்கம் வைத்த தமிழை வளர்த்தனர். தமிழில் புலமை வாய்ந்த புலவர்களைப் போற்றி புகழ்ந்தனர். அகத்திய மாமுனிவர், தொல்காப்பியர், ஔவையார், கபிலர், நிறைய பாணர்கள் என இன்னும் பலர் இருக்கிறார்கள். இவர்களின் காப்பியங்கள் யாவும் இன்றளவும் மிக அழகாகத் தொகுக்கப்பட்டுப் பேணி காக்கப்படுகின்றன.

தமிழின் இனிமைக்கும், செழுமைக்கும், நுட்பத்திற்கும் இவ்விலக்கண, இலக்கியங்கள் அனைத்தும் பெறும் செழுங்கிளைகளாக இருக்கின்றன. 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று கூறுவார்கள். அதேபோல, செம்மொழியான தமிழ்மொழிக்கு இலக்கணமும் இலக்கியமும் இரு கண்கள் போன்றதாகும்.

அகநானூறு

சங்க இலக்கியத்தில் அக இலக்கியம் என கூறப்படுவது எட்டுத்தொகை பாடல்களாகும். அவை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு ஆகும். அவ்வகையில், நெடுந்தொகை என்று அழைக்கப்படும் அகநானூறு நூலைத் தொகுத்தவர் உப்பூரிக்குடி கிழார் மகனார் உருத்திர சன்மர். பழந்தமிழரின் அகவொழுக்க நினைவுகளோடு மட்டுமே அமையாமல், அவர்களது பெருமையும், அறமும், ஒழுக்கமும், வளமையும், பண்பும் இன்னும் பல வாழ்வியல் நெறிச் செப்பங்களும் இத்தொகையினுள் பொதிந்து கிடக்கின்றன. திருநெல்வேலியில் ஒரு தென்பாண்டித் தமிழரின் பாதுகாப்பில் 'கொல்லம் 460' என்ற குறிப்புடன் கிடைக்கப்பெற்ற ஏடானது, அகநானூறு ஏழு நூற்றாண்டுகளுக்கும் முற்பட்டதென்று காட்டி, அதன் பழமையை வலியுறுத்துகிறது.

அகநானூற்றின் முதற்பகுதி 1 முதல் 120 செய்யுள்கள் களிற்றியானை நிரை என்று அழைக்கப்படும் தொகையாகும். அதாவது, மும்மதங்களால் களித்தலையுடைய களிற்றியானை நிரை, மணியோடும் சேர்த்துக் கோர்த்த அழகு ஒளிரும் மணிமிடை பவளம், சிறப்பான நித்திலக்கோவை என்ற விதமாக முத்திறம் உடையனவாகத் தொடுக்கப்பட்டதே இந்த நல்ல நெடுந்தொகையாகும்.

நின்ற நீதி வென்ற நேமிப்
பழுதில் கொள்கை வழுதியர் அவைக்கண்
அறிவுவீற் றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
அருந்தமிழ் மூன்றுந் தெரித்த காலை...

என தொடங்கும் நூலின் பாயிரத்தில் காணப்படும் இப்பாடலானது அகநானூறுக்குப் பாடப்பட்ட கருத்து அகவலால் ஆகும். இதனைப் பாடியவர் பெருமைமிக்க சோழ நாட்டின் ஓர் ஊரான மணக்குடியைச் சேர்ந்த பால்வண்ண தேவனான வில்லவ தரையன். பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும் மதுரை உப்பூரிக்குடிகிழான் மகனான உருத்திர சன்மனும் இப்பாடலைத்

தொகுத்தவர்கள். இதுவே, அகநானூறு தொடர்பான சிறிய வரலாறு ஆகும். அகநானூற்றில் 1 முதல் 40 பாடல்களில் காணப்படும் **உயிரளபெடை** இலக்கண விதியை ஆய்வு செய்தல் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அளபெடை

சங்கம் வைத்து வளர்த்த தமிழுக்கு இலக்கியம் ஒரு கண் என்றால், இலக்கணம் இன்னொரு கண் என்று கூறப்படுகிறது. உண்மையில் இலக்கண விதிகள் நன்கு அறிந்து புரிந்தவர்களுக்குப் பழந்தமிழ் இலக்கியங்கள் எத்தகைய ஒழுங்கு, கட்டுடன் அமைக்கப்பட்டிருக்கின்றது என்று புரியும்.

பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் அனைத்து செய்யுள் பாக்களுமே தொல்காப்பியத்தை ஒத்திட்ட ஒழுங்கான இலக்கண விதிகளோடு அமையப்பெற்றவை. சரியான யாப்பிலக்கணம், அசை, சீர், குற்றியலுகரம், இடைச் சொற்கள் என கட்டு, வாய்ப்பாட்டோடு அமைந்தவைகளாகும். சரியாகச் சீர் பிரித்துப் பார்க்கும்பொழுதே இதனை நன்கு அறிய முடியும். எனவே, தமிழின் நுட்பத்தையும் இலக்கிய இன்பத்தையும் அடைய இலக்கண அறிவு மிக அவசியமாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களில் அளபெடை மிக முக்கியமான இலக்கண விதியாகும். செய்யுள்களில் சில அளபெடைகள் இசைநிறையாகவும் சிலது சூழல் காரணங்களுக்காகவும் இடம்பெறுகிறது.

குன்று இசை மொழிவயின் நின்று இசை நிறைக்கும்
நெட்டெழுத்து இம்பர் ஒத்த குற்றெழுத்தே
ஐ, ஔ என்னும் ஆயீர் எழுத்திற்கு
இகர உகரம் இசை நிறைவு ஆகும்.

பொதுவான அளபெடை வரும் இடங்களும் அதன்பின் வரும் இன எழுத்துகள் பற்றியும் சூத்திரம் விளக்குகிறது (மாணிக்கவாசகன்.ஞா.2006:15).

தமிழ் எழுத்துகள் சொற்களில் ஒலிக்கூறுகளாக ஒலிக்கும்போது, பல்வேறு காரணங்களால் இடத்தைப் பொருத்து, தங்களுக்குரிய இயல்பான மாத்திரையளவிலிருந்து குறைந்தோ கூடியோ ஒலிக்க நேர்வதுண்டு. இவ்வாறு குறைந்து ஒலிப்பது குறுக்கம் என்றும் கூடி ஒலிப்பது அளபெடை என்றும் இலக்கணத்தில் கூறப்படுகிறது. அளபெடை உயிரளபெடை, ஒற்றளபெடை என இருவகைப்படுகிறது.

அளபெடை என்ற தொடர், **அளபு + எடை** என விரியும். **அளபு** என்பது **மாத்திரையளவைக்** குறிக்கிறது. **எடுத்தல்** என்பது **அதிகமாக்கப்படுவது** என்று பொருள்படும். எடுப்பான பல் என்பது இயல்பான அளவைவிட நீண்டபல் என்றே பொருள்படும். கொடுப்பது கொடை என்பதுபோல எடுப்பது எடை ஆயிற்று. **எடுத்தல்** என்பது ஓர் **அளவை முறையே.** எனவே, அளபெடை என்பது, ஓர் எழுத்தை ஒலிப்பதற்கு உரிய நேரம், அதன் இயல்பான மாத்திரை அளவிலிருந்து

அதிகமாக்கப்படுவதைக் குறிக்கிறது. அதாவது, அளபை நீட்டுவது அளபெடை ஆகும். இவ்வாறு, ஓர் எழுத்துத் தன் இயல்பான மாத்திரையளவைவிட நீட்டி அதாவது அளபெடுத்து ஒலிக்கப்படுவது செய்யுளில் மட்டுமின்றி வழக்கிலும் பல காரணங்களால் நிகழ்கிறது. உயிரெழுத்து நீண்டு ஒலிப்பது உயிரளபெடையாகும்.

ஆய்வு நோக்கம்

அகநானூற்றில் உயிரளபெடையின் பயன்பாட்டை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆய்வு வரையறை

தமிழில் பிரசித்திப்பெற்ற பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான அகநானூறு பாடல்களே உயிரளபெடை தொடர்பான இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. புலியூர்க்கேசிகனின் 'அகநானூறு, மூலமும் உரையும்' நூல் இலக்கியத்திற்கான முதன்மை மேற்கோள் நூலாக இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அகநானூறு பாடல்கள் பல சங்கக் காலப் புலவர்களால் இயற்றப்பட்ட அகம் சார்ந்த பாடல்களாகும். இவ்வாய்விற்கு அகநானூறு 1 முதல் 40வரை உள்ள பாடல்கள் உட்படுத்தப்பட்டுள்ளன. அகநானூற்றுப் பாடல்களில் உயிரளபெடை என்ற இலக்கணக்கூறு மட்டும் ஆராயப்பட்டுள்ளது.

ஆய்விலக்கிய மீள்நோக்கு

தமிழில் இலக்கணம், இலக்கியம் தொடர்பாகப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலக்கண, இலக்கியங்களைப் பல கோணங்களில் ஆய்ந்து அறிந்து தரவுகளோடு ஆய்வுக் கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன.

அகநானூற்றில் உயிரளபெடைகள் ஆராய்தல் பற்றிய கட்டுரைகள் இதற்கு முன்பு மேற்கொள்ளவில்லை. முருகலெட்சுமி (2022), அகநானூற்றில் 'பழந்தமிழர்களின் வாழ்வியல் முறைகள்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார். திருமணம், மக்கட்பேறு, வழிபாடு, விருந்தோம்பல், உணவு போன்ற பல வாழிவியல் கருத்துகள் ஆய்வில் சொல்லப்பட்டன.

சிவகுரு (2019), 'அகநானூறு மரபும் பண்பாடும்' என்ற தலைப்பில் நித்திலக்கோவை பகுதியில் உள்ள பாடல்களைப் பற்றி ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். ஆய்வில் குறிஞ்சி, மருதம், முல்ல, நெய்தல், பாலை என 5 திணைகளில் இடம்பெற்ற பாடல்களைப் பிரித்துக் காட்டியுள்ளார்.

முருகு (2022), 'அகநானூறு தோழிக்கூற்று உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்' என்ற தலைப்பில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டார். கற்பு வாழ்க்கை, களவு வாழ்க்கை, தோழியின் ஆற்றுவித்தல் தொடர்பான அகநானூற்று பாடல்கள் இவ்வாய்வில் ஆராயப்பட்டுள்ளது.

அளபெடைகள் பற்றிய ஆய்வுகள் தேடப்பட்டபோது, 'திருக்குறளில் அளபெடைகள்' பற்றிய ஆய்வு செய்யப்பட்டிருந்தது. தசரதன் & செல்வராஜ் (2024), இருவர் திருக்குறளில் 80 இடங்களில் காணப்படும் அளபெடைகள் பற்றியும் அவ்வளபெடைகள் இன்னிசை; செய்யுளிசை அளபெடைகளாக வந்துள்ள விதத்தைப் பற்றியும் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளனர்.

மேலும், திருஞானசம்பந்தம் (2021) 'திருக்குறளில் வண்ணக் கோட்பாடு' என்ற தலைப்பில் ஓர் ஆய்வு செய்துள்ளார். திருக்குறளில் காணப்படும் குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம், அளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம் போன்ற வண்ணங்கள் பற்றிய மு. சண்முகம் பிள்ளையின் ஆய்வைப் பற்றிய மதிப்பீட்டுக் கட்டுரை எழுதியுள்ளார்.

கி. பாலமுருகன் (2021) என்பவர் 'பத்துப்பாட்டில் அளபெடைகள்' பற்றிய ஆய்வு ஒன்றை மேற்கொண்டார். பத்துப்பாட்டில் வரும் அளபெடைகளைச் சேகரித்து அதன் வகைகளான செய்யுளிசை, இன்னிசை, சொல்லிசை; அது பயின்று வரும் முதல், இடை, கடை இடங்கள் பற்றிய ஆய்வை மேற்கொண்டார். ஆகவே, அகநானூற்றில் உயிரளபெடைகள் பற்றிய இந்த ஆய்வு முன்னாய்வுகளோடு வேறுபடுகிறது.

ஆய்வு அணுகுமுறை

அகநானூறு பாடல்களில் காணப்படும் உயிரளபெடைகள் பயன்பாட்டினை ஆராய்வதால் இது ஒரு பண்புசார் ஆய்வாக அமைகிறது. இது பகுப்பாய்வு விளக்க முறையில் இருப்பதாலும் இதை விளக்க முறை ஆய்வாகவும் கொள்ளலாம். இந்த ஆய்வானது 'நூலக ஆய்வு', 'இலக்கிய ஆய்வு' என இரு வகை அணுகுமுறையில் எழுதப்பட்டுள்ளது. இலக்கணம், இலக்கியம் தொடர்பான நூல்கள், ஆவணங்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவைகள் முதன்மையாகக் கொண்டு தகவல்கள், குறிப்புகள் சேகரிக்கப்பட்டு ஆழமான புரிதலுக்குப் பின் இந்த ஆய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக இலக்கணம் தொடர்பான பல எழுத்தாளர்களின் புத்தகங்களிலிருந்து குறிப்புகள் எடுக்கப்பட்டுள்ளது.

இலக்கிய ஆய்வு என்ற அணுகுமுறையும் இதனுள் உட்படுத்தப்பட்டுள்ளது. பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான அகநானூறு தொடர்பான தகவல்களும் அகநானூற்றில் உள்ள பாடல்களில் இருக்கும் இலக்கண விதியான அளபெடை வகைகள் பற்றிய தரவுகளும் திரட்டப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின் இந்த ஆய்வானது நூலக அடிப்படையிலான இலக்கிய ஆய்வு ஆகும்.

ஆய்வுக் கண்டுபிடிப்பும் கலந்துரையாடலும்

அகநானூற்றில் உயிரளபெடை

வெறுத்த ஏஎர், வேய்புரை பணைத்தோள்,
நிறுப்ப நில்லா நெஞ்சமோடு நின்மாட்டு

பாடல் பொருள் : மிக்க **அழகினை** உடைய, மூங்கிலை நிகர்த்த பணைத்த தோள்களையுடைய இவளும், நிறுத்தவும் நில்லாது நின்னையே தொடர்கின்ற நெஞ்சத்தை உடையவளாக, நின்னிடத்தே இத்தகைய காதல் உடையவள் என்றால், இவளுடைய தந்தையின் அரிய காத்தல் தொழிலையுடைய காவலாளர் சோர்ந்திருக்கும் செவ்வியை மறைவாக அறிந்து, இரவிலே இரவுக்குறி நாடி வருதற்கும் நீ உரியவனாவாய்!

மேற்கண்ட பாடலில் உள்ள **ஏஎர்** என்ற சொல் அளபெடை கொண்ட சொல் ஆகும். 'ஏஎர்' சொல்லின் பொருளானது **'அழகு'** அல்லது **'அழகினை'** என்பதாகும். வெறுத்த 'ஏஎர்' என்றால் 'மிக்க அழகினை உடைய' என்று பொருள்படும். செய்யுளில், **ஓசையை நிறைவு**செய்யவும் இனிமைப்படுத்தவும் சொல்லை நீட்டி ஒலிக்கவும் இந்த அளபெடை பயன்படுத்தப்பட்டுள்ளது. சொல்லுக்கு நடுவில் 'எ' என்ற உயிர் எழுத்து வந்துள்ளதால் இது **உயிரளபெடை** ஆகும். நெடுலுக்கு ஏற்ற குறில் முதல் இடத்தில் வந்ததால் அதாவது **முதலிலுள்ள எழுத்து அளபெடுத்ததால்** முதல் வகை (இடம்) உயிரளபெடை ஆகும்.

ஏஎர்– ஏ என்பது நேரடியான உயிர்நெடில் எழுத்து. அருகில் அதன் குறிலான எ ஒரு முறை அளபெடுத்தது. (ஏ + எ; ஏ அளபெடுத்தது)

(ஏ – இயல்பான 2 மாத்திரை + எ, 1 மாத்திரை அளபெடை; ஏ 3 மாத்திரை ஒலித்தது.)

எனவே, 3 மாத்திரை அளபெடுத்துள்ள இச்சொல்லை 'ஏர்' என்று 3 மாத்திரை அளவு நீட்டி ஒலிப்பர்.

புல்லிலை மராஅத்த அகன்சேண் அத்தம்,

கலந்தரல் உள்ளமொடு கழியக் காட்டிப்

பாடல் பொருள் : குறைந்த இலைகளை உடைய மரா மரங்களை உடைய அகண்ட நீண்ட நெறியை (கடுமையான பாதையை) அணிகலன்கள் ஈட்டவேண்டும் என்ற எண்ணத்துடன் கடந்துசெல்வதாகக் காட்டி பின்னால் இருந்து விரட்டும் நெஞ்சமே! உன் வாயின் மெய் போன்ற பொய்மொழிகள் (என்) துன்பத்தை எவ்வாறு களையும்?

மேற்கண்ட பாடலில் உள்ள **மராஅத்த** என்ற சொல் அளபெடை கொண்ட சொல் ஆகும். 'மராஅத்த' என்ற சொல் **மரா மரங்களைக்** குறிப்பதாகும். புல்லிலை மராஅத்த என்றால் குறைந்த இலைகளையுடைய மரா மரங்கள் என்று பொருள்படும். செய்யுளில், இந்தச் சொல்லானது **ஓசையை நிறைவு** செய்யவும் **இனிமைப்படுத்தவும்** சொல்லை நீட்டி ஒலிக்கவும் இந்த அளபெடை பயன்படுத்தப்பட்டுள்ளது. சொல்லுக்கு நடுவில் 'அ' என்ற உயிர் எழுத்து வந்துள்ளதால் இது **உயிரளபெடை** ஆகும். நெடிலுக்கு ஏற்ற குறில் சொல் இடையில் வந்ததால் அதாவது **இடையிலுள்ள எழுத்து அளபெடுத்ததால்** இடை வகை (இடம்) உயிரளபெடை ஆகும்.

மராஅத்த – ரா என்பது உயிர்மெய்நெடில் எழுத்து. அருகில் அதன் குறிலான அ ஒரு முறை அளபெடுத்தது. (ரா > ர் + ஆ; ஆ அளபெடுத்தது)

(ரா – இயல்பான 2 மாத்திரை + அ, 1 மாத்திரை அளபெடை; ரா 3 மாத்திரை ஒலித்தது.)

எனவே, 3 மாத்திரை அளபெடுத்துள்ள இச்சொல்லை 'மராத்த' என்று 3 மாத்திரை அளவு நீட்டி ஒலிப்பர்.

துளிதலைத் தலைஇய மணியேர் ஐம்பால்

சிறுபுறம் புதைய வாரி, குரல் பிழியூஉ

பாடல் பொருள் : தலைவனைச் சந்திக்க வரும் தலைவி, தன்னை நன்றாக அலங்கரித்து வருகிறாள். தலைமுடியை ஐந்தாகப் பகுத்துச், சிலவற்றைக் கொண்டையாக முடித்து, சிலவற்றைக் கூந்தலாகப் பின்புறம் தொங்கவிட்டிருக்கிறாள். ஐம்பால் என சொல்லக்கூடிய இத்தலையலங்காரத்தில் மழைத்துளிகள் பட்டு கொண்டையை நனைத்துவிடுகின்றன. தலைமுடியின் ஒருபகுதி முதுகை மறைத்துத் தொங்கவிடப்பட்டிருக்கிறது. நனைந்து தொங்கும் கூந்தல் இழைகள் ஒன்றுக்கொன்று

ஒட்டிக்கொள்கின்றன. கூந்தலைக் கோதி நெகிழ்த்திவிட்டு பின்னர் கூந்தலைச் சேர்த்து **முறுக்கிப் பிழிகிறாள்**. (துவட்டத் துணி இல்லாமல்).

மேற்கண்ட பாடலில் உள்ள **பிழியூஉ** என்ற சொல் அளபெடை கொண்ட சொல் ஆகும். 'பிழியூஉ' என்ற சொல் **முறுக்கிப் பிழிதல்** என்ற பொருளையுடையது. மழையில் நனைந்த கூந்தலை தலைவி முறுக்கிப் பிழிவதைக் கூறுகிறது. துவட்ட துணி இல்லாத பெண்கள் கூந்தலை எவ்வாறு உலர்த்துவார்கள் என்று மிக அழகான வர்ணனையுடன் கூறப்படுகிறது. இவ்வளபெடை சொல் வேறு சில காரணங்கள் என்று சொல்லக்கூடிய **வர்ணனைக்காக** இடம்பெற்றிருக்கிறது. மேலும், செய்யுளில், இந்தச் சொல்லானது **ஓசையை நிறைவு**செய்யவும் **இனிமைப்படுத்தவும்** சொல்லை நீட்டி ஒலிக்கவும் இந்த அளபெடை பயன்படுத்தப்பட்டுள்ளது. சொல்லுக்கு இறுதியில் 'உ' என்ற உயிர் எழுத்து வந்துள்ளதால் இது **உயிரளபெடை** ஆகும். நெடிலுக்கு ஏற்ற குறில் சொல்லின் இறுதியில் வந்ததால் அதாவது **இறுதியிலுள்ள எழுத்து அளபெடுத்ததால்** கடை வகை (இடம்) உயிரளபெடை ஆகும்.

பிழியூஉ – யூ என்பது உயிர்மெய்நெடில் எழுத்து. அருகில் அதன் குறிலான உ ஒரு முறை அளபெடுத்தது. (யூ > ய் + ஊ; ஊ அளபெடுத்தது)

(யூ – இயல்பான 2 மாத்திரை + உ, 1 மாத்திரை அளபெடை; யூ 3 மாத்திரை ஒலித்தது.)

எனவே, 3 மாத்திரை அளபெடுத்துள்ள இச்சொல்லை 'பிழியூ' என்று 3 மாத்திரை அளவு நீட்டி ஒலிப்பர்.

துயத்தலை வெண்காழ் பெறூஉம்

கல்கெழு சிறுகுடிக் கானவன் மகளே.

பாடல் பொருள் : வயது காரணமாக உடலில் பல மாற்றங்கள் ஏற்பட்ட சிறுமியிடம் செவிலித்தாய் கூறும் அறிவுரைகள் சார்ந்து இப்பாடல் அமையப் பெற்றுள்ளது. அவ்வூரில் கலை என்னும் ஆண் குரங்கு பலாப்பழத்தின் நல்ல சுளைகளை ஆய்ந்து பொறுமை இல்லாமல் சுளைகளைத் தின்று கொட்டைகளை அவ்வூர் மக்களுக்கு விட்டுச் செல்லுமாம். 'துயத்தலை வெண்காழ்' என்பது நார்ப்பகுதி ஒட்டிக்கொண்ட கொட்டை எனப்படும். **பெறூஉம்** என்பது பெறும் ஆகும். அக்கொட்டைகளைப் **பெறும்** கற்கள் அதிகம் கொண்ட சிறுகுடி ஊர் மகளே என்பது மேற்கண்ட வரிகளின் பொருள் ஆகும்.

மேற்கண்ட பாடலில் உள்ள **பெறூஉம்** என்ற சொல் அளபெடை கொண்ட சொல் ஆகும். '**பெறூஉம்**' என்ற சொல் **பெறும்** என்ற பொருளையுடையது. அதாவது, குரங்கிடமிருந்து பலா சுளை விதைகளைப் பெறுதல் என்று பொருள்படும். சிறுகுடி என்ற ஊரின் வழமையைப் கவிஞர் கூறுகிறார். இவ்வளபெடை சொல் வேறு சில காரணங்கள் என்று சொல்லக்கூடிய **வர்ணனைக்காக** இடம்பெற்றிருக்கிறது. மேலும், செய்யுளில், சொற்களை ஒலிப்பவர் உணர்வு மிகுதியால் அதை நீட்டியும் ஒலித்தனர். காரணம், பாடல் சூழலில் வயது வந்த சிறுமி காதலனைத் தேடி காணாமற் போகிறாள். "இப்படிப்பட்ட ஊரில் (சிறுகுடி) உள்ள பெண்ணைப் பார்த்தீர்களா?!" என்று தாய் புலம்பி ஊர் மக்களிடம் கவலை, அச்சம் கலந்த உணர்வோடு கேட்கிறாள். எனவே, சொல் அழுத்திக் கூறப்பட்டு அளபெடுத்துள்ளது. சொல்லுக்கு இடையில் 'உ' என்ற உயிர் எழுத்து வந்துள்ளதால் இது **உயிரளபெடை** ஆகும். நெடிலுக்கு ஏற்ற குறில் சொல்லின் இடையில் வந்ததால் அதாவது **இடையிலுள்ள எழுத்து அளபெடுத்ததால்** இடை வகை (இடம்) உயிரளபெடை ஆகும்.

பெறூஉம் – றூ என்பது உயிர்மெய்நெடில் எழுத்து. அருகில் அதன் குறிலான உ ஒரு முறை அளபெடுத்தது. (றூ > ற் + ஊ; ஊ அளபெடுத்தது)

(றூ – இயல்பான 2 மாத்திரை + உ, 1 மாத்திரை அளபெடை; றூ 3 மாத்திரை ஒலித்தது.)

எனவே, 3 மாத்திரை அளபெடுத்துள்ள இச்சொல்லை 'பெறூம்' என்று 3 மாத்திரை அளவு நீட்டி ஒலிப்பர்.

திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்-

குழியில் கொண்ட மராஅஅ யானை

பாடல் பொருள் : குழியிலே வீழ்த்திக் கைக்கொண்ட பழகாத யானைகளைத், தன் ஏவலினால் செயற்படும்படி உணர்த்துவிக்கன்ற சிறுபொழுது அல்லாமல், பிற பொழுதுகள் எல்லாம், ஒரு வரையறை ஏதும் இல்லாமல், இரவலர்களுக்கும் வாரி வாரி வழங்கிக் கொண்டே இருப்பவன்; கூர்மை வாய்ந்த அம்பினை உடையவன்; கோடைக்குத் தலைவன்; பாண்டியனின் படைத்தலைவன் பண்ணி. **மராஅஅ** என்பது பொருள் மருவாத யானை என்று பொருள்படும். யானைப் பாகனால் புறக்கணிக்கபடும் பழகாத யானை. இவ்வகை யானையை வீழ்த்தும் வீரம் பற்றிய வர்ணனை ஆகும்.

மேற்கண்ட பாடலில் உள்ள **மராஅஅ** என்ற சொல் அளபெடை கொண்ட சொல் ஆகும். '**மராஅஅ**' என்ற சொல் **மரா** என்ற பொருளையுடையது. அதாவது, மருவாத அல்லது பழக்கப்படுத்தாத யானை என்று பொருள். இவ்வளபெடை சொல் வேறு சில காரணங்கள் என்று சொல்லக்கூடிய **வர்ணனைக்காக** இடம்பெற்றிருக்கிறது. மேலும், செய்யுளில், ஓசையை நிறைவுசெய்யவோ இனிமைப்படுத்தவோ சொல் நீட்டி ஒலிக்கப்பட்டிருக்கிறது. பண்ணி என்ற பாண்டிய நாட்டு படைத்தலைவன் பற்றிய வர்ணனை பாடலில் உள்ளது. பழகாத யாணையை அடக்குபவன் என்பது வர்ணனை. வீரம் சார்ந்த சொல் அழுத்திக் கூறப்பட்டு அளபெடுத்துள்ளது. சொல்லுக்கு இறுதியில் 'அ' என்ற உயிர் எழுத்து வந்துள்ளதால் இது **உயிரளபெடை** ஆகும். நெடிலுக்கு ஏற்ற குறில் சொல்லின் இறுதியில் வந்ததால் அதாவது **இறுதியிலுள்ள எழுத்து அளபெடுத்ததால்** கடை வகை (இடம்) உயிரளபெடை ஆகும்.

மராஅஅ – ரா என்பது உயிர்மெய்நெடில் எழுத்து. அருகில் அதன் குறிலான அ இரு முறை அளபெடுத்தது. (ரா > ர் + ஆ; ஆ அளபெடுத்தது)

(ரா – இயல்பான 2 மாத்திரை + அஅ, இரு முறை வந்ததால் 2 மாத்திரை அளபெடை; ரா 4 மாத்திரை ஒலித்தது.)

எனவே, 4 மாத்திரை அளபெடுத்துள்ள இச்சொல்லை 'மரா' என்று 4 மாத்திரை அளவு நீட்டி ஒலிப்பர்.

"நெடுங்கரைக் கான்யாற்றுக் கடும்புனல் சாஅய,

அவர்அறல் கொண்ட விரவுமணல் அகன் துறைத்

பாடல் பொருள் : தலைவனைக் காணாது தவிக்கும் தலைவிக்கு ஆறுதல் சொல்லி அவளது ஆற்றாமையைக் குறைப்பதாய் பாடல் அமைந்துள்ளது. பாடலின் முழுக்க நிறைய வர்ணனைகள் உள்ளது. காட்டாறு மேடுபள்ளங்களிலுள்ள பகுதியில் விரைந்து வரும்போது வளைந்து நெளிந்து ஓடும். ஆனால், சமவெளிக்கு வரும்போது சீராக ஓடும். நெடுங்கரைக் கான்யாறு என்பது காட்டாறு கடும் வேகத்துடன் ஊர்ப் பகுதியை நெருங்கிவிட்டது. **சாஅய** என்பது **நீர் வற்றிவிட்டதன்** பொருள். காலம் மாறியதன் பொருள். நீர் வற்றி தென்படும் கரிய நுன்மணலை கவிஞர் பெண்களின் கூந்தலுக்கு ஒப்பிடுகிறார்.

மேற்கண்ட பாடலில் உள்ள **சாஅய** என்ற சொல் அளபெடை கொண்ட சொல் ஆகும். '**சாஅய**' என்ற சொல் **சாய** என்ற பொருளையுடையது. அதாவது, நீர் வற்றிப்போகுதல் என்று பொருள். இவ்வளபெடை சொல் வேறு சில காரணங்கள் என்று சொல்லக்கூடிய **வர்ணனைக்காக** இடம்பெற்றிருக்கிறது. மேலும், செய்யுளில், ஓசையை நிறைவுசெய்யவோ இனிமைப்படுத்தவோ சொல் நீட்டி ஒலிக்கப்பட்டிருக்கிறது. கால மாற்ற சூழல்களில் ஆறு வற்றியிருத்தலின் வர்ணனையைப் பாடல் குறிக்கிறது. சொல்லுக்கு முதலில் 'அ' என்ற உயிர் எழுத்து வந்துள்ளதால் இது **உயிரளபெடை** ஆகும். நெடிலுக்கு ஏற்ற குறில் சொல்லின் முதலில் வந்ததால் அதாவது **முதலிலுள்ள எழுத்து அளபெடுத்ததால்** முதல் வகை (இடம்) உயிரளபெடை ஆகும்.

சாஅய – சா என்பது உயிர்மெய்நெடில் எழுத்து. அருகில் அதன் குறிலான அ ஒரு முறை அளபெடுத்தது. (சா > ச் + ஆ; ஆ அளபெடுத்தது)

(சா – இயல்பான 2 மாத்திரை + அ, ஒரு முறை வந்ததால் 1 மாத்திரை அளபெடை; சா 3 மாத்திரை ஒலித்தது.)

எனவே, 3 மாத்திரை அளபெடுத்துள்ள இச்சொல்லை 'சாய' என்று 3 மாத்திரை அளவு நீட்டி ஒலிப்பர்.

ஒழுகை நோன்பகடு ஒப்பக் குழீஇ

அயிர்திணி அடைகரை ஒலிப்ப வாங்கிப்,

பாடல் பொருள் : இளையோரும் முதியோரும் ஒன்று கூடி கடலில் கூடி வலையை இழுக்கும் காட்சி உப்பு மூட்டைகளை ஏற்றிச் செல்லும் உப்பு விற்கும் உமணர்கள் ஆற்று மணல் மேட்டில் செல்லும்போது வரிசையான மாடுகள் மும்முரமாக வண்டியை இழுப்பதற்கு ஒப்பாகக் கவிஞர் எழுதியிருக்கிறார். **குழீஇ** என்பதன் பொருள் **கூடியிருத்தல்** ஆகும். வலையை இழுக்க கூடியிருக்கும் காளையர்களைக் குறிக்கிறது.

மேற்கண்ட பாடலில் உள்ள **குழீஇ** என்ற சொல் அளபெடை கொண்ட சொல் ஆகும். '**குழீஇ**' என்ற சொல் **குழீ** என்ற பொருளையுடையது. அதாவது, ஒன்று கூடுதல் என்று பொருள். இவ்வளபெடை சொல் வேறு சில காரணங்கள் என்று சொல்லக்கூடிய **வர்ணனைக்காக** இடம்பெற்றிருக்கிறது. மேலும், செய்யுளில், **ஓசையை நிறைவு**செய்யவோ இனிமைப்படுத்தவோ சொல் நீட்டி ஒலிக்கப்பட்டிருக்கிறது. மீனவர்கள் வலையை இழுக்க கூடியிருக்கும் காட்சி வர்ணனையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சொல்லுக்கு இறுதியில் 'இ' என்ற உயிர் எழுத்து வந்துள்ளதால் இது **உயிரளபெடை** ஆகும். நெடிலுக்கு ஏற்ற குறில் சொல்லின் இறுதியில் வந்ததால் அதாவது **இறுதியிலிலுள்ள எழுத்து அளபெடுத்ததால்** கடை வகை (இடம்) உயிரளபெடை ஆகும்.

குழீஇ – ழீ என்பது உயிர்மெய்நெடில் எழுத்து. அருகில் அதன் குறிலான இ ஒரு முறை அளபெடுத்தது. (ழீ > ழ் + ஈ; ஈ அளபெடுத்தது)

(ழீ – இயல்பான 2 மாத்திரை + இ, ஒரு முறை வந்ததால் 1 மாத்திரை அளபெடை; ழீ 3 மாத்திரை ஒலித்தது.)

எனவே, 3 மாத்திரை அளபெடுத்துள்ள இச்சொல்லை 'குழீ' என்று 3 மாத்திரை அளவு நீட்டி ஒலிப்பர்.

இரவல் மாக்களின் பணிமொழி பயிற்றுச்,

சிறுதினைப் படுகிளி கடீஇயர், பன்மாண்

பாடல் பொருள் : முதல் நான்கு வரிகள் தலைவனின் அழகை உணர்வுப்பூர்வமாகத் தலைவி வர்ணிப்பதாக உள்ளது. **கடீஇயர்** என்பதன் பொருள் சிறிய தினையிற் பொருந்தும் கிளிகளை

ஓட்டுமாறு, குளிருடன் கூடிய தட்டையாகிய கிளிகடி கருவிகள் கொண்டு மென்மையாகச் செய்யும் தலைமகளைக் குறிக்கிறது. கடீஇயர் என்பது கிளி விரட்ட கருவி என்பதாகும்.

மேற்கண்ட பாடலில் உள்ள **கடீஇயர்** என்ற சொல் அளபெடை கொண்ட சொல் ஆகும். '**கடீஇயர்**' என்ற சொல் **கடீர்** என்ற பொருளையுடையது. அதாவது, கிளி விரட்ட கருவி என்பதாகும். என்று பொருள். இவ்வளபெடை சொல் வேறு சில காரணங்கள் என்று சொல்லக்கூடிய **வர்ணனைக்காக** இடம்பெற்றிருக்கிறது. **உணர்வுப்பூர்வமான** சொல்லாகவும் அழுத்தம்கொண்டு வந்துள்ளது. மேலும், செய்யுளில், **ஓசையை நிறைவு**செய்யவோ இனிமைப்படுத்தவோ சொல் நீட்டி ஒலிக்கப்பட்டிருக்கிறது. சொல்லுக்கு இடையில் 'இ' என்ற உயிர் எழுத்து வந்துள்ளதால் இது **உயிரளபெடை** ஆகும். நெடிலுக்கு ஏற்ற குறில் சொல்லின் இடையில் வந்ததால் அதாவது **இடையிலுள்ள எழுத்து அளபெடுத்ததால்** இடை வகை (இடம்) உயிரளபெடை ஆகும்.

கடீஇயர் – டீ என்பது உயிர்மெய்நெடில் எழுத்து. அருகில் அதன் குறிலான இ ஒரு முறை அளபெடுத்தது. (டீ > ட் + ஈ; ஈ அளபெடுத்தது)

(டீ – இயல்பான 2 மாத்திரை + இ, ஒரு முறை வந்ததால் 1 மாத்திரை அளபெடை; டீ 3 மாத்திரை ஒலித்தது.)

எனவே, 3 மாத்திரை அளபெடுத்துள்ள இச்சொல்லை 'கடீர்' என்று 3 மாத்திரை அளவு நீட்டி ஒலிப்பர்.

நெறிஇருங் கதுப்பின்என் பேதைக்கு,

அறியாத் தேஎத்து ஆற்றிய துணையே!

பாடல் பொருள் : தன் காதலனுடன் வாழ்வதற்காக வீட்டைவிட்டு வெளியேறும் தன் மகள் தான் அவளைப் பார்த்துக்கொண்டது போலவே, அவனும் அறியாத தேசத்தில் இருக்கும் அவளை மார்பில் சாய்த்து கூந்தல் தடவி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தாய் வேண்டுவதாய் இப்பாடல் அமையப்பெற்றுள்ளது. **தேஎத்து** என்பதன் பொருள் **தேசத்தில்** ஆகும்.

மேற்கண்ட பாடலில் உள்ள **தேஎத்து** என்ற சொல் அளபெடை கொண்ட சொல் ஆகும். '**தேஎத்து**' என்ற சொல் **தேயத்து** என்ற பொருளையுடையது. அதாவது, தேசம் என்பதாகும். இவ்வளபெடை சொல் **உணர்வுப்பூர்வமான** சொல்லாக **அழுத்தம்கொண்டு** வந்துள்ளது. தாய் மிகவும் **வருத்தமான** சூழலில் கூறுவதாய் இச்சொல் அளபெடுத்து வந்துள்ளது. சொல்லுக்கு இடையில் 'ஏ' என்ற உயிர் எழுத்து வந்துள்ளதால் இது **உயிரளபெடை** ஆகும். நெடிலுக்கு ஏற்ற குறில் சொல்லின் முதலில் வந்ததால் அதாவது **முதலிலுள்ள எழுத்து அளபெடுத்ததால்** முதல் வகை (இடம்) உயிரளபெடை ஆகும்.

தேஎத்து – தே என்பது உயிர்மெய்நெடில் எழுத்து. அருகில் அதன் குறிலான எ ஒரு முறை அளபெடுத்தது. (தே > த் + ஏ; ஏ அளபெடுத்தது)

(தே – இயல்பான 2 மாத்திரை + எ, ஒரு முறை வந்ததால் 1 மாத்திரை அளபெடை; தே 3 மாத்திரை ஒலித்தது.)

எனவே, 3 மாத்திரை அளபெடுத்துள்ள இச்சொல்லை 'தேயத்து' என்று 3 மாத்திரை அளவு நீட்டி ஒலிப்பர்.

பகுவாய் வராஅல் பல்வரி இரும்போத்துக்

கொடுவாய் இரும்பின் கோள்இரை துற்றி,

பாடல் பொருள் : தூண்டில் புழுவால் கவரப்பட்ட கொழுத்த வரால் மீன், புழுவை விழுங்க முயன்று மாட்டிக் கொண்டது. தூண்டில்காரனின் இழுப்புக்கு இடம் தராமல் குளம், அதில் உள்ள கொடி, மலர், இலை என அனைத்தையும் சிதைக்கிறது. வேறு பெண்ணுடம் கூடியிருந்துவிட்டு வரும் தலைமகனை எதிர்கொண்டு வர்ணனைக் கூறி பேசுகிறாள். பகுவாய் **வராஅல்** என்பது வளைந்த வாயினை உடைய வரால் மீன் என்று பொருள்.

மேற்கண்ட பாடலில் உள்ள **வராஅல்** என்ற சொல் அளபெடை கொண்ட சொல் ஆகும். '**வராஅல்**' என்ற சொல் **வரால்** என்ற பொருளையுடையது. அதாவது, ஒரு மீன் என்பதாகும். இவ்வளபெடை சொல் வேறு சில காரணங்கள் என்று சொல்லக்கூடிய **வர்ணனைக்காக** இடம்பெற்றிருக்கிறது. மேலும், செய்யுளில், **ஓசையை நிறைவு**செய்யவோ இனிமைப்படுத்தவோ சொல் நீட்டி ஒலிக்கப்பட்டிருக்கிறது. சொல்லுக்கு இடையில் 'அ' என்ற உயிர் எழுத்து வந்துள்ளதால் இது **உயிரளபெடை** ஆகும். நெடிலுக்கு ஏற்ற குறில் சொல்லின் இடையில் வந்ததால் அதாவது **இடையிலுள்ள எழுத்து அளபெடுத்ததால்** இடை வகை (இடம்) உயிரளபெடை ஆகும்.

வராஅல் – ரா என்பது உயிர்மெய்நெடில் எழுத்து. அருகில் அதன் குறிலான அ ஒரு முறை அளபெடுத்தது. (ரா > ர் + ஆ; ஆ அளபெடுத்தது)

(ரா – இயல்பான 2 மாத்திரை + அ, ஒரு முறை வந்ததால் 1 மாத்திரை அளபெடை; ரா 3 மாத்திரை ஒலித்தது.)

எனவே, 3 மாத்திரை அளபெடுத்துள்ள இச்சொல்லை 'வரால்' என்று 3 மாத்திரை அளவு நீட்டி ஒலிப்பர்.

முடிவுரை

அகநானூறில் முழுக்க முழுக்க உயிரளபெடைகள் மட்டுமே மிக அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வினை மேற்கொண்டு முடிக்கும்பொழுது இன்னும் நிறைய பழந்தமிழ் இலக்கியங்களில் உயிரளபெடைகளையும் ஒற்றளபெடைகளும் அது அங்கு வந்ததற்கான காரணங்களையும் யூகித்து, அளபெடுத்துள்ள மாத்திரை அளபுகளையும் கணக்கிட முடிகிறது. எனவே, இவ்வாய்வு பல நல்ல நன்மைகளைத் தந்துள்ளது.

ஆசிரியர்கள் இலக்கியத்தில் இது போன்ற பல ஆய்வுகள் மேற்கொண்டு இலக்கண விதிகளை ஆய்ந்து இலக்கிய எடுத்துக்காட்டுகளோடு மாணவர்களுக்குக் கொண்டுசேர்க்கும்பொழுது இலக்கணம், இலக்கியம் என இரண்டு அறிவும் மாணவர்களுக்குக் கிட்டும் என்பது திண்ணம். இரண்டிலும் அவர்களது ஆர்வமும் மேம்படும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில், இலக்கியத்தில் இலக்கண விதிகளைக் காணும் இவ்வணுகுமுறையானது ஒரு சேர இரண்டையும் மாணவர்களுக்குக் கற்றுத்தரும் வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்கிறது. இவ்வகையான ஆய்வு படைப்பாற்றல் திறனையும் வளர்க்கிறது எனலாம். காரணம், ஆசிரியர்களோ மாணவர்களோ புதியதாக மரபு கவிதைகள் எழுதுவதற்கு இவ்வகை அளபெடைகளைக் அதன் காரணங்களோடு கவிதைகளில் பயன்படுத்தலாம்.

இலக்கணம், இலக்கியம் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ள நினைக்கும் பல ஆய்வாளர்கள் இதே போன்ற ஏதாகினும் ஒரு பழந்தமிழ் இலக்கியத்தைத் தெரிவு செய்து அதில் காணப்படும் இலக்கண விதிகளை ஆய்வு செய்து கட்டுரை எழுதலாம். இது அனைவருக்கும் பல நல்ல தகவல்களைக் கொடுக்கும். மேலும், நிறைய பழந்தமிழ் இலக்கியங்கள் தூசு தட்டப்படும்; இலக்கண அறிவு மேம்படும். அன்றாட வாழ்க்கையில் சரியான இலக்கண விதி பயன்பாடும் அதிகரிக்கும் என்பது திண்ணம்.

துணைநூற்பட்டியல்

ஆறுமுக நாவலர். (2022). நன்னூல், காண்டிகை உரை (எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்) (முதற்பதிப்பு). ராம் பிரசுரம்.

சீனி நைனா முகம்மது. செ. (2013). நல்ல தமிழ் இலக்கணம் (முதற்பதிப்பு). அடையாளம் பிரஸ்.

மாணிக்கவாசகன். ஞா. (2010). தொல்காப்பியம் (மூலமும் விளக்க உரையும்) (மூன்றாம் பதிப்பு). உமா பதிப்பகம்.

சிங்கப்பூர் சித்தார்த்தன். (2010). இலகு தமிழில் இனிக்கும் தமிழ் இலக்கணம் (முதற்பதிப்பு). நர்மதா பதிப்பகம்.

தசரதன், கா. & செல்வராஜ்., இரா. (2024). திருக்குறளில் அளபெடை - The Concept of "அளபெடை" in Tirukkural: கா.தசரதன், முனைவர் பட்ட ஆய்வாளர். தமிழ் உயராய்வுத் துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி) கோயம்புத்தூர் - 641 018. dhasaradhan9751@gmail.com 8190015088 முனைவர். இரா. செல்வராஜ் இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத் துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் - 641 018. selvarajarts1979@gmail.com 9788557488. KALANJIYAM - International Journal of Tamil Studies, 3(04), 51-60. https://doi.org/10.5281/zenodo.13956429

முருகுலட்சுமி, எஸ். (2022). அகநானூற்றில் வாழ்வியல். Life in Akananooru. International Research Journal of Tamil, 4(2), 45–51. https://doi.org/10.34256/irjt22285

சிவகுரு, என். (2019). அகநானூறு மரபும் பண்பாடும். Aganannuru tradition and culture. International Research Journal of Tamil, 1(1), 41–45. https://doi.org/10.34256/irjt1921.

முருகு, வி. (2022). அகநானூறு தோழிக்கூற்று உணர்த்தும் வாழ்வியல் நெறிகள். [Life values expressed through occupations in Akananuru]. International Journal of Creative Research Thoughts (IJCRT), 10(12), 1–6.

திருஞானசம்பந்தம். பி. (2021). திருக்குறளில் வண்ணக் கோட்பாடு. Type of Rhymes in Tirukkural. இந்திய ஆய்விதழ். Journal of Indian Studies, Vol 14. No. 1(2021) 96-105.